10th August 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பங்களூரில் கூடிய அனைத் திந்தியக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் முடிவு என்ன என்று கேட்கப்பட்டதற்கு அந்த முடிவுகளைக் கொடுத்திருக்கிறேன். அவை தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : செய்யப்பட்ட முடிவுகளில் கல்வியின் தரத்தை உயர்த்த ஏற்பாடு செய்வது என்பது ஒன்று. அதன்படி நன்கு படிக்காதவர்களுக்கு அபராதம் விதிப்பது என்பது இந்த ஆண்டில் இருந்தே பள்ளிக்கூடத் தேர்வுகளை ஒட்டி அமுலாக்கப்படுமா? அப்படி அமுலாக்கப்படுவதிலே பரிட்சையின் தரம் பள்ளிக்குப் பள்ளி வித்தியாசப்படுவதை நினைவில் கொண்டு எல்லாவற்றுக்கும் பொதுவான வகையில் அபராதத்தைச் சீராக விதிக்க முடியும் என்று அரசாங்கம் நம்புகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. தரத்தை உயர்த்துவது பொதுவான விஷயம். பல கோணங்களில் இருந்து இது கவனிக்கப்பட்டு வருகிற விஷயம்.

* 164 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் காஷ்மீரில் நடைபெற்ற அகில இந்திய கல்வி மாநாட்டில் கல்வி முறையை மாற்றி அமைப்பது குறித்து ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

Part-time Degree Course in Engineering

* 165 *Q.*—SRI S. MADHAVAN : } Will the Hon. the Minister
SRI A. THIAGARAJAN : }
for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start part-time Degree Course in Engineering; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) Two centres for part-time B.E. (or A.M.I.E.) course for Diploma holders will be organised, one at the College of Engineering, Guindy and the other at the Government College of Technology, Coimbatore, each with an annual in take of about 90 students, subject to the concurrence of the Madras University.

[10th August 1965

திரு. செ. மாதவன் : இந்தப் படிப்பு எத்தனை ஆண்டுகளுக்கு இருக்கின்றது? இதன் தரம் என்ஜினீயரிங் படிப்புக்குக் குறைவானதாக இருக்குமா? அதிகமானதாக இருக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த வருஷம்தான் இந்த ஸ்கிமை ஆரம்பித்திருக்கிறோம். எல். எம். இ., எல்.ஸி.இ. போன்ற டிப்ளமா ஹோல்டர்கள் பார்ட்-டைமில் படித்து பி.இ., டிகிரி வாங்குவதற்காக இதை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. செ. மாதவன் : இப்போது டிப்ளமா கோர்ஸ் படித்தவர்கள் ஏ. எம். ஐ. இ., படிப்பு படிக்கிறார்களே, அதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஏ.எம்.ஐ.இ., சர்டிபிகேட் கோர்ஸ். இது பி. இ., டிகிரி வாங்க வசதி செய்கிறது.

திரு. சா. கணேசன் : இந்தப் பகுதி நேரப் பட்டப் படிப்பைத் துவக்கும் முன்னே இதற்கு எத்தனை ஆண்டுகள் என்பது நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா ? அந்த ஆண்டுகளுக்குள் பாஸ் செய்யாவிட்டால் பிற படிப்பைப் போல அடுத்து அடுத்துச் சென்று தேர்வு அடையவோ, பார்ட் பார்ட்டாகத் தேர்வு அடையவோ வழி வகை செய்யப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்த விவரம் என்னிடம் இப்போது இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. செ. மாதவன் : இங்கே பார்ட்-டைம் கோர்ஸ் என்று குறிப்பிட்டிருக்கிறபடியால் டிப்ளமா ஹோல்டர்கள் வேலையில் இருந்து கொண்டே படிக்க வாய்ப்பு உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுதான் நோக்கம்.

Ex-servicemen Co-operative Motor Transport Societies

*166 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of Ex-servicemen Co-operative Motor Transport Societies in the State;

(*b*) the number of stage carriage permits owned by them, district-wise; and

(*c*) the net income of those societies for the year 1964–65?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Seven (7).